**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஐப்பசி திங்கள் 4–ம் நாள்

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் திங்கட்கிழமை

இடைநிலை மனு எண்.2/2024

இன்

அசல் வழக்கு எண்.5/2024

(CNR.No.TNTR21–000005–2024)

...

ஏழுமலை ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. கஜேந்திரன்
2. ஈஸ்வரன்
3. பாஸ்கர் (எ) சந்திரபாபு ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு கடந்த 03.10.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. கார்த்திகேயன், E. தணிகைராஜ் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் V. ரீசர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுச் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தினை எதிர்மனுதாரரோ, அவர்வகையாட்களோ இவ்வழக்கு முடியும்வரை இடைஞ்சல் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

(அ) மனுச் சொத்துக்கள் பார்வதி, குப்பம்மாள், ஆதிமூலம், கோபி மற்றும் நரேந்திரன் ஆகியோர்களிடமிருந்து மனுதாரரால் 31.08.2008 ம் தேதியிட்டு 30 செண்ட் கிரையம் பெற்று அதுமுதல் அனுபவத்தில் இருந்து வருகிறார். அதைபோல் 26.03.2015 ம் தேதியிட்டு 38 செண்டை நரசம்மாள், நாராயணன் ஆகியோரிடமிருந்து மனுதாரர் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். பிரதிவாதிகள் பக்கத்து நிலத்துக்காரர்கள். மனுச் சொத்துக்களின் மேற்கு எல்லையிலுள்ள சொத்துக்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி மேற்கு பக்கத்தில் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். அதை நிறுத்த

வேண்டி மனுதார் வழக்கு சொத்தை அளவீடு செய்து எல்லைகள் நிர்ணயம் செய்ய வேண்டி நில அளவையருக்காக விண்ணபித்து நில அளவையர் அளவீடு செய்து 03.10.2023 ம் தேதியிட்டு எல்லைகள் நிர்ணயம் செய்துள்ளார்.

(ஆ) அதன்பின்னிட்டும் பிரதிவாதிகள் வேண்டுமென்றே சண்டையிட்டு வடக்கு பக்கமிருந்து போக அனுமதிக்கவில்லை. 29.01.2024 ம் தேதியிட்டு அதிகாலை 7.30 மணிக்கு விவசாய வேலைக்கு வழக்கு சொத்திற்கு சென்றபோது, பிரதிவாதிகள் அங்கு வந்து கெட்ட வார்த்தைகளால் திட்டி, பெண் என்றும் பாராமால் மனுதாரரையும் மனுதாரரரின் மருமகளின் சேலையையும் பிடித்து இழுத்து மனுதாரரின் மகனின் தலையில் கத்தியால் குத்தி உள்ளார். அதனால் அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அதன் பின்னிட்டு வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். அதைப் பொறுத்து திருத்தணி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண்.106/2024 பதிவு செய்து விசாரணை நிலுவையில் உள்ளது.

(இ) மனுதாரர் மருத்துவமனையில் இருந்ததை சாதகமாக எடுத்துக் கொண்டு பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் சீமைகருவேல மர முள் வைத்து வழக்கு சொத்தை பயன்படுத்தவிடாமல் தடுத்து விட்டனர். பிரதிவாதிகள் மீண்டும் கெட்ட வார்த்தைகளால் திட்டி சண்டையிட்டு வருகிறார்கள். பிரதிவாதிகள் சட்டத்தை மதிக்கமாட்டார்கள், செல்வாக்கு உடையவர்கள். வழக்கு சொத்தை மேற்கு பக்கம் அபகரிக்க முயற்சிக்கிறார்கள். 03.02.2024 ல் மீண்டும் மனுதாரரிடமும், அவர் குடும்பத்தினரிடமும் பிரதிவாதிகள் சண்டையிட்டதால் மனுதாரர் திருத்தணி காவல் நிலையத்தை அணுகினார். அங்கு நீதிமன்றத்தை அணுக கூறப்பட்டது. எனவே வழக்கு சொத்தைப் பொறுத்து இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மறுப்புரையின் சுருக்கம்:–</u>**

(அ) வழக்கு சொத்தை 31.08.2008 ம் தேதியிட்டும், 26.03.2015 ம் தேதியிட்டும் கிரையம் பெற்று அது முதல் அனுபவத்தில் இருந்து வருவதாகவும், பிரதிவாதிகள் மேற்கு பக்கம் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தால் வழக்கு சொத்தை அளவீடு செய்து எல்லை நிர்ணயம் செய்ய கட்டணம் செலுத்தப்பட்டு 03.10.2023 ம் தேதியிட்டு அளவீடு செய்யப்பட்டு எல்லை கற்கள் ஊன்றப்பட்டதாகவும், பிரதிவாதிகள் பிரச்சனை செய்து மனுதாரரையும் மனுதாரரின் மகனையும் அடித்து அவர் மருத்துவனையில் 6 நாட்கள் உள்நோயாளியாக இருந்ததாகவும், 03.02.2024 ம் தேதியிட்டு வேலிகாத்தான் மரங்களை வைத்து வாதிகளை வழக்கு சொத்தில் வர விடாமல் பிரதிவாதிகள் தடுத்தாகவும், பிரதிவாதிகள் பலம்மிக்கவர் என்றும், சட்டத்தை மதிக்காதவர்கள் என்றும் வாதிக்கு இடைஞ்சல் கொடுக்கக்கூடியவர்கள் என்றும், முதல்நோக்கு வழக்கும் சமநோக்கும் வாதிக்கு சாதகமாக உள்ளது என்றும் சொல்வது சுத்த பொய். மேற்படி வழக்கின் வியாஜ்ஜிய மூலம் கற்பனையானது.

(ஆ) கோரியுள்ள பரிகாரம் சரியாதனல்ல. விளம்புகை பரிகாரம் கோராத இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. இவ்வழக்கு சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கு புலஎண்.256/4ல் 1 ஏக்கர் 43 செண்ட் கந்தேசன், ராமாஞ்சலு மகன் சுப்பிரமணி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவத்து வந்து, அவர்கள் இறந்த பின்னிட்டு கந்தேசனின் மூன்று மகன்களான ரங்கப்பன், செங்கல்ராயன், சின்னையன் ஆகியோர்கள் அனுபவித்து, சுப்பிரமணி இறப்பிற்கு பின்னிட்டு அவரது மனைவி, மகன், மகள்களான பார்வதி, குப்பம்மாள், ஆதிமூலம், கோபி, நரேந்திரன் ஆகியோர்கள் அனுபவித்து வந்தனர். மேற்படி நபர்கள் 1 ஏக்கர் 43 செண்டை பொதுவில் அனுபவித்து வந்தனர்.

(இ) 1ம் பிரதிவாதி மேற்படி புலஎண்ணில் 0.75 ஏர்–ஐ தாமோதரன், சுப்பிரமணி ஆகியோரிடமிருந்து 15.12.2016ம் தேதியிட்டு கிரையம் பெற்றுள்ளார். இந்த பிரதிவாதி வழக்கு சொத்தில் 0.75 ஏர்–ஐ பொதுவில் வைத்து அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்து இன்னும் பிரிக்கப்படவில்லை. வாதி 0.30 ஏர்–ஐ 31.03.2008ம் தேதியிட்டு பார்வதியிடமிருந்து கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது. வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கிரையம் கொடுத்தவருக்கு வழக்கு சொத்து பாகம் செய்யப்படவில்லை. எனவே 31.03.2008ம் தேதியிட்டு வாதி பெயரிலுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அது பிரதிவாதியைக் கட்டுப்படுத்தாது. வாதி, நரசம்மாள் மற்றும் நாராயணனிடமிருந்து 0.38 ஏர்–ஐ 26.03.2015ம் தேதியிட்டு கிரையம் பெற்றுள்ளார்.

(ஈ) 2015ம் ஆண்டிலேயே வழக்கு சொத்து பாகம் பிரிக்கப்படாத நிலையில் 26.03.2015 தேதியிட்ட கிரைய ஆவணத்திலுள்ள நான்கு எல்லைகள் கற்பனையானது. அது பிரதிவாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ய வேண்டி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அது பிரதிவாதியைக் கட்டுப்படுத்தாது. சட்டப்படி செல்லாது. மேற்படி 26.03.2015ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்ய வேண்டியுள்ளது. மொத்தம் 1 ஏக்கர் 43 செண்டிற்கு பட்டா கூட்டுக் குடும்பதாரர்கள் பெயரில் உள்ளது. அதற்கு 2018 வருடம் வரையிலும் தனிப்பட்டா யார் பெயரிலும் வழங்கப்படவில்லை.

(உ) 31.03.2008, 26.03.2015ம் தேதியிட்ட கிரைய ஆவணங்களில் வாதி பெயரில் குறிப்பிட்டுள்ள எல்லைகள் கற்பனையானது. வாதி தனது செல்வாக்கை பயன்படுத்தி உட்பிரிவு செய்து பிரதிவாதிகளுக்கு தெரியாமல் கூட்டு பாகஸ்தர்களுக்கு தெரியாமல் 2018ம் வருடம் பெற்றுள்ள பட்டா சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி உட்பிரிவு நீதிமன்றத்தால் ரத்து செய்யத்தக்கது. வாதி, பிரதிவாதிகளுக்கு தெரிந்தே உட்பிரிவு செய்திருக்க வேண்டும். வாதி பணம் கொடுத்ததற்கு ரசீது, நிலஅளவையர் அறிக்கை பிராதுடன் தாக்கல் செய்யப்படவில்லை. 1 ஏக்கர் 43 செண்ட் மேற்படி 3 சகோதரர்களால் வாய்மொழியாக தன்னிச்சையாக பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது. வடக்கு பக்கம் 38 செண்ட் சின்னயைனுக்கும், மத்தியிலுள்ள பகுதி

செங்கல்ராயனுக்கும், தெற்கு பக்கம் ரங்கப்ப நாயுடுவுக்கும் ஒதுக்கப்பட்டு அவ்வாறே மேற்படி 3 நபர்களும் எழுத்துமூலம் பாகப்பிரிவினை செய்யாமல் அனுபவித்து வந்தனர். எனவே தென்வடலாக வடக்கு பக்கம் சின்னயனுக்கும், மத்தியில் செங்கல்வராயனுக்கும், தெற்கு பக்கம் ரங்கப்பனுக்கும் உட்பிரிவு செய்ய வேண்டியுள்ளது.

(ஊ) பிராதில் கூறியுள்ளபடி எந்த எல்லையும் இல்லை. நீதிமன்றத்தில் யாருக்கு இடைக்கால உறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ அவர் அந்த உத்தரவை கடைப்பிடிக்க வேண்டும். வாதி நீதிமன்றத்தின் இடைக்கால உறுத்துக் கட்டளை உத்தரவை வைத்துக் கொண்டு வழக்கு சொத்தை குலைக்க முயற்சிக்கிறார். வாதி வழக்கு சொத்தில் அவர் கிரைய ஆவணத்தில் கூறியுள்ள நான்கு எல்லைகள்படி அனுபவத்தில் இல்லை. ஒருதரப்பு தற்கால உறுத்துக் கட்டளை உத்தரவை கொண்டு, வாதி சட்ட விரோத நடவடிக்கை செய்து வருவதால் அதை ரத்து செய்ய வேண்டியுள்ளது. வாதி, வழக்கு சொத்தின் இயற்கை அமைப்பு, அளவுகளை ஒருதரப்பு உத்தரவின் உதவியுடன் மாற்றி அமைக்க முயற்சிக்கிறார்.

(எ) வழக்கு சொத்தை அதற்கு குறிப்பிட்ட நான்கு எல்லைகளுடன் நில அளவையர் உதவியுடன் அளவீடு செய்து அனுபவித்து வருகிறார் என்பதை வாதி நிரூபிக்க வேண்டும். பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் அடையாளம், அதன் விஸ்தீரணம், நான்கு எல்லைகள் பொறுத்து ஆட்சேபணை செய்கிறார்கள். வழக்கு சொத்தின் புலம் தவறாக சொல்லப்பட்டுள்ளது. 1098 என்ற பட்டா எண்ணில் கூட்டுப் பட்டா உள்ளது. மேலும் பட்டா எண்.2110, வாதி பெயருக்கு 2018 ல் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ள 2018 வரை வழக்கு சொத்து எல்லைகள் குறிப்பிட்டு உட்பிரிவு செய்யப்படவில்லை. வாதி, அவருக்கு கிரையம் கொடுத்தவர்கள் பெயரிலுள்ள தனிப்பட்ட பட்டாவை தாக்கல் செய்யவில்லை. வாதி, பிராதில் குறிப்பிட்ட நான்கு எல்லைகளின்படி வழக்கு சொத்தின் உரிமையாளர் இல்லை.

(ஏ) பெரும்நிலம் அடங்கிய வழக்குசொத்து உட்பிரிவு செய்யப்பட வேண்டியுதால் கூட்டுஉரிமையாளருக்கு எதிராக உறுத்துக் கட்டளை வழங்க இயலாது. வழக்கு சொத்தின் உரிமை குறித்து ஆட்சேபணை உள்ளதால் விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும். விளம்புகை பரிகாரம் இல்லாமல் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள இந்த வழக்கு சட்டப்படியும் பொருண்மையின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதியிடமிருந்து சொத்தை அபகரிக்கும் எண்ணம் பிரதிவாதிகளுக்கு இல்லை. பிரதிவாதிகள் சட்டப்படி நடக்கக்கூடியவர்கள். கூட்டு உரிமையாளருக்கு எதிரான நிரந்தர உறுத்துக் கட்டளை வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும். வாதி சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

## 4. தீர்வுக்குரிய பிரச்சனை:–

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில்

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. **<u>தீர்வு:—</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுச் சொத்தை மனுதாரர் 31.08.2008ம் தேதியிட்டு 30 செண்டும், 26.03.2015ம் தேதியிட்டு 38 செண்டும், கிரையம் பெற்று அது முதல் அனுபவித்து வருவதாகவும், பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்துள்ளதாகவும், குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பதாகவும், தற்போதும் வாதியை வழக்கு சொத்தில் நுழையவிடாமல் பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து வருவதாகவும், எனவே இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்க கோரி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. வழக்கு சொத்து எல்லைகள் குறிப்பிட்டு உட்பிரிவு செய்யப்படாத நிலையில் வாதி ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணமே சட்டப்படி செல்லாது என்றும், கூட்டு உரிமையாளர்கள் மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றும், வாதியின் அனுபவமே சட்டப்படி செல்லாது என்ற நிலையில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என்றும் மனுவை தள்ளுபடி செய்ய கோரி எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

6. அசல் வழக்கில் வாதி கிரையம் வாங்கியிருப்பது பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. பிரதிவாதிகள் வழக்கு சொத்தான புலஎண்.256/4ல் சுமார் 75 செண்டை தாமோதரன் வகையறாவிடமிருந்து 15.12.2016ம் தேதியிட்ட கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது. வாதியும், பிரதிவாதிகளும் வழக்கு சொத்தை தனித்தனியாக கிரையம் பெற்றுள்ளனர் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து வடக்கு தெற்காக வாய்மொழியாக பாகம் செய்யப்பட்டுள்ளதாகவும், அது கிழமேற்காக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த உட்பிரிவு சட்டப்படி செல்லாது என்றும் கூறி ஆட்சேபணை செய்யப்பட்டது.

7. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருவருமே மனுச் சொத்தை கிரையம் பெற்றுள்ளது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் மேற்படி நிலத்தில் சீமைகருவேல மரங்கள் இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் கிரையம் பெற்ற நிலத்தை அனுபவிக்க விடாமல் எதிர்மனுதாரர்கள் இடைஞ்சல் செய்து வருகிறார்கள் என்பது ம.சா.ஆ.8, ம.சா.ஆ.9 ஆகிய ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆவணங்களில் குறிப்பட்டுள்ள மனு சொத்தை மனுதாரர் கிரையம் பெற்று மனுதாரர் பெயருக்கு பட்டா மாற்றி அனுபவம் செய்து வருகிறார் என்பதை ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.5 ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. எனவே, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலாக ஆவணங்களின் அடிப்படையில் மனு சொத்து மனுதாரர் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்பதும், மனுதாரரின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து வருகிறார்கள் என்பதை ம.சா.ஆ.8, ம.சா.ஆ.9 ஆவணங்கள் மூலம் தெரியவரும் நிலையில்

மனு சொத்தை பொறுத்து மனுதாரரின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்வதால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற மனுதாரர் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் முதல் நோக்கு வழக்கு, மனுதாரருக்கு ஆதரவாக இருப்பது தெரிய வருகிறது. ம.சா.ஆ.8, ம.சா.ஆ.9 ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரர் கோரிய பரிகாரம் வழங்கப்படாதபட்சத்தில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும் என்ற மனுதாரரின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மனுச் சொத்தில் சீமைகருவேல மரங்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மனு சொத்தை அசல் வழக்கு முடியும்வரை தற்போதுள்ள அதே நிலையில் அப்படியே வைத்திருக்க உத்தரவிடுவதே இம்மனுவின் சூழலில் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனு சொத்தை அசல் வழக்கு முடியும்வரை தற்போதுள்ள அதே நிலையில் அப்படியே (Status–quo) வைத்திருக்க உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/– R.D. Gurulakshmi
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி:–</u> இல்லை

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.த.சா.ஆ.1 | 31.03.2008 | கிரைய ஆவணம்– அசல் |
| 2. | ம.த.சா.ஆ.2 | 26.03.2015 | கிரைய ஆவணம்– அசல் |
| 3. | ம.த.சா.ஆ.3 | 03.02.2024 | கணிணி பட்டா எண்.2110–இணையவழி நகல் |
| 4. | ம.த.சா.ஆ.4 | –– | அ–பதிவேடு விவரங்கள் –இணையவழி நகல் |
| 5. | ம.த.சா.ஆ.5 | –– | புலவரைபடம் |
| 6. | ம.த.சா.ஆ.6 | 30.01.2024 | வில்லங்கச்சான்று –இணையவழி நகல் |
| 7. | ம.த.சா.ஆ.7 | –– | சாகுபடி அடங்கல் கணக்கு – உண்மைநகல் |
| 8. | ம.த.சா.ஆ.8 | –– | திருத்தணி அரசு மருத்துவமனை வெளியேற்ற அறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| 9. | ம.த.சா.ஆ.9 | 03.02.2024 | புகார் மனு – நகல் |
| 10. | ம.த.சா.ஆ.10 | -- | புகைப்படங்கள் (2) மற்றும் குறுந்தகடு |
| 11. | ம.த.சா.ஆ.11 | 15.12.2016 | கிரைய ஆவணம்–சான்றிட்ட நகல் |
| 12. | ம.த.சா.ஆ.12 | 12.06.2015 | கிரைய ஆவணம்–சான்றிட்ட நகல் |
| 13. | ம.த.சா.ஆ.13 | 30.07.2024 | கணிணி பட்டா எண்.1098–இணையவழி நகல் |
| 14. | ம.த.சா.ஆ.14 | -- | புலவரைபடம் – நகல் |
| 15. | ம.த.சா.ஆ.15 | -- | புலவரைபடம் – நகல் |
| 16. | ம.த.சா.ஆ.16 | -- | புலவரைபடம் – நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை

Sd/– R.D. Gurulakshmi
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.